

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இளங்கோ சந்தித்து, ஒன்றிய அரசின் மும்மொழிக்கொள்கை திட்டத்தினை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாததால், ஒன்றிய அரசு மாநிலத்திற்கான நிதியினை விடுவிக்காத நிலையில், தன்னுடைய மகன் நினைவு நாளையொட்டி, ராகேஷ் சட்ட அறக்கட்டளையின் சார்பில், “நம்ம ஊரு நம்ம பள்ளி” திட்டத்தின் கீழ், இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு பயன்படுத்திடும் வகையில் 10 இலட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.3.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2025) முகாம் அலுவலகத்தில், பத்மஸ்ரீ விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தெருக் கூத்து கலைஞர் புரிசை கண்ணப்ப சம்மந்தன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கொளத்தூரில் நடைபெற்ற நமது பண்பாட்டுக் கலைகளைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சியை நடத்தியமைக்காக சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் மற்றும் கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள மோர்தானா பிரதான கால்வாய் தூர்வாரி புனரமைக்கும் பணியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன் எம்.எல்.ஏ., லே.ரவிச்சந்திரன், என்.இ சத்யானந்தம், எஸ்.சவந்தரராஜன், ஆர்.ரமேஷ், கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இலண்டன் நகரில் கடந்த 8.3.2025 அன்று முதல் நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய இசைஞானி இளையராஜா அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் விமான நிலையத்தில் நேற்று (10.03.2025) நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து மலர்க்கொத்து வழங்கி வரவேற்றனர்.

### பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை!

## வேலூர் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் குடியாத்தத்தில் பொதுக்கூட்டம்!

### ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – தி.அ.முகமது சகி - அமுலு விஜயன் எம்.எல்.ஏ. – குடந்தை பாஸ்கர் பேசுகின்றனர்!

வேலூர், மார்ச் . 11–

வேலூர் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் ”தமிழ்நாடு போராடும் ”தமிழ்நாடு வெல்லும் என்ற ஒன்றிய மக்கள் விரோத பா.ஜ.க. அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நாளை (புதன் கிழமை )மாலை 6 மணிக்கு குடியாத்தம் பழைய பேருந்து நிலையத்தில் நடக்கிறது. கூட்டத்துக்கு நகர கழக செயலாளரும்

நகர மன்றத் தலைவருமான எஸ்.சௌந்தர்ராஜன் தலைமை தாங்குகிறார் .

மாவட்ட துணை செயலாளர் ஜி.எஸ்.அரசு அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

நகரக் கழக அவைத் தலைவர் க. கோ நெடுஞ்செழியன், நகர துணை செயலாளர்கள் மனோஜ், ஏ.வசந்தா ஆறுமுகம், மாவட்ட பிரதிநிதிகள் கவிஞர் பாரி, பெரிய கோடீஸ்வரன், கே .தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டத்தில் கழக பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார்.

மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை பாஸ்கர் மாவட்ட அவைத் தலைவர்தி.அ. முகமது சகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.,மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணிதலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, குடியாத்தம் ஒன்றிய பெருந் தலைவர் என் இ சத்யானந்தம் வேலூர் மாவட்ட துணை செயலாளர் எம்.பிரபாத் குமார் குடியாத்தம் ஒன்றிய செயலாளர்கள் கள்ளூர்ரவி, பிரதீஷ், அன்பரசன், கே.ஜனார்த்தனன்,எம்.டேவிட், பேரணாம்பட்டு நகர செயலாளர்ஆலியார்ஜுபேர்அகமத் நகரமன்ற தலைவர் பிரேமா வெற்றிவேல் தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் கள்கே. கண்ணன், புவியரசி ஆலியார்ஹரஷத் தொகுதி பொறுப்பாளர் டேம். வெங்கடேசன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன் மற்றும் மாவட்ட , ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசுகிறார்கள். குடியாத்தம் நகர தி.மு.க. ஏற்பாடுகளை செய்துள்ளது.

### தமிழின உரிமைப் போராளி

## ஐயா பழ.நெடுமாறன் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, மார்ச் 11–

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் 93ஆவது பிறந்த நாளில் அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.**

**தமிழின உரிமைப் போராளியாக அவர் ஆற்றி வரும் தொண்டு தொடர்க!**

இவ்வாறு முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2025) முகாம் அலுவலகத்தில், பத்மஸ்ரீ விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பறை இசை கலைஞர் ஆர். வேல்முருகன் (வேலு ஆசான்) அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கொளத்தூரில் நடைபெற்ற நமது பண்பாட்டுக் கலைகளை கொண்டாடும் விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சியை நடத்தியமைக்காக சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் உள்ளனர்.

### இதுவரை ரூ.6 கோடியே 19 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 19 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 10–03–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | தீ.கணேசன், ஒன்றிய பிரதிநிதி, அம்பேத்கர் நகர், அரூர், தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 2. | எம். சுந்தரசாமி, பாலாஜி நகர், சுண்டக்காமுத்தூர், கோவை – 641 010 | 25,000/– |
| 3. | ஏ.பி.நாகப்பன், அங்கணகவுண்டன்புதூர், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். | 25,000/– |
| 4. | எம். கார்த்திகேயன் (எ) கார்த்தி, வேலப்பநாயக்கன்வலசு, காங்கேயம், திருப்பூர் | 25,000/– |
| 5. | எம்.பி.ராஜூ, மஞ்சூர், குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி மாவட்டம். | 25,000/– |
| 6. | மா. இராமகிருஷ்ணன், கிளாக்குளம், வீரவநல்லூர், திருநெல்வேலி | 25,000/– |
| 7. | பி.போஸ், கருப்பட்டி, கிராமம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு மாவட்டம். | 25,000/– |
| 8. | ரா.மாரியப்பன், கோடங்கால், கடம்பூர் பேரூர், தூத்துக்குடி வடக்கு மாவட்டம். | 25,000/– |
| | மொத்தம் | ரூ.2,00,000/- |